ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2408/06 – 2024 ඔක්තෝබර් මස 28 වැනි සඳුදා – 2024.10.28
*2408/06 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 143)**

நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரான அநுரகுமார திசாநாயக்க ஆகிய நான், தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 143) பிரிவு 2 இன் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டு சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் மூன்றாம் கட்டத்திற்காக, 2024 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தனிநபர்கள் மற்றும் வீட்டுக்கூறு பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்கு உத்தரவிடுகிறேன்.

அநுர குமார திசாநாயக்க,
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல்,
திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2024, ஒற்றோபர் 16.*

EOG 10 - 0240/ 1

## தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம்

தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (143 ஆம் அத்தியாயம்) 5 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரினால் விதிக்கப்பட்ட விதிகள்.

அநுர குமார திஸாநாயக்க,
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல்,
திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2024, ஒற்றோபர் 16.

### விதிகள்

### பிரிவு I – ஆரம்பம்

1. இவ்விதிகள், 2024 குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு விதிகள் என அழைக்கப்படும்.

2. இவ்விதிகளில் வேறுவித சம்பந்தமாக வரைவிலக்கணம் தேவைப்பட்டால் தவிர "கட்டளைச் சட்டம்" என்பது தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் (143 ஆம் அத்தியாயம்), என்றும் "அத்தியட்சகர்" என்பது தொகைமதிப்பு அத்தியட்சகர், "ஆணையாளர்" என்பது, தொகைமதிப்பு ஆணையாளரையும், "பிரதி ஆணையாளர்" என்பது பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர், "உதவி ஆணையாளர்" என்பது உதவித் தொகைமதிப்பு ஆணையாளர் எனவும் பொருள்படும். (2022 சனவரி 25 ஆம் திகதிய 2264/ 8 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியில், தொகைமதிப்பு அத்தியட்சகர் மற்றும் தொகைமதிப்பு ஆணையாளர்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளார்கள்). இவர்களுக்கு மேலதிகமாக, தொகைமதிப்புப் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் தொகைமதிப்பு உத்தியோகத்தர்கள் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றனர்.

### விதிகள்

### பிரிவு II – பொது

1. குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 2024 இற்குரிய கணக்கெடுக்கும் நடவடிக்கைகள் பின்வருமாறு நடாத்தப்பட வேண்டும்.

| | செயற்பாடு | கால எல்லை |
|---|---|---|
| i. | டெப்லெட் கணினிகள், "அன்ட்றொய்ட்" செல்லிட சாதனங்கள் மற்றும் இணையத்தளப் படிவத்தைப் பயன்படுத்தி வழமையான வசிப்பிடத்தின் பிரகாரம் நபர்கள் பற்றிய தகவல்களையும், வீட்டுக்கூறுகள் தொடர்பான தகவல்களையும் சேகரித்தல். | 2024 ஒற்றோபர் தொடக்கம் 2024 திசெம்பர் வரை |
| ii. | தொகைமதிப்புத் தினம் | 2024 திசெம்பர் 19 |
| iii. | திருத்தச் சுற்று<br><br>தொகைமதிப்புத் தினம் மற்றும் தொகைமதிப்புக் கணம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வழமையாக வசிக்கும் நபர்களுடைய தகவல்கள் திருத்தப்பட்டு கணக்கெடுத்தல். | 2024 திசெம்பர் 19 - 2024 திசெம்பர் 23 |

2. சகல நபர்களும் கணக்கெடுப்புக் கட்டத்துடன் தொடர்புடைய தகவல்களை அத்தியட்சகர் அல்லது ஆணையாளரினால் குறித்த பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தொகைமதிப்பு உத்தியோகத்தருக்கு வழங்க வேண்டும்.

3. அத்தியட்சகர் அல்லது ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட மேற்பார்வை அதிகாரிகள் கணக்கெடுப்புக் கட்டத்துடன் தொடர்புடைய மேற் குறிப்பிட்ட சாதனங்கள் மற்றும் படிவங்களில் பதியப்படும் தகவல்களின் நிலையினைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

**பிரிவு III - தொகைமதிப்பு உத்தியோகத்தர்களுடைய கடமைகள்**

1. கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட ஏதாவது விதிகள் மூலம் அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரம் அல்லது கடமை, அத்தியட்சகருடைய பொதுவான அல்லது விசேட கட்டளைப் பிரகாரம் பிரதித் தொகைமதிப்பு அத்தியட்சகரொருவரினால் நாடு முழுவதிலும் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி அத்தியட்சகருக்கு குறித்த பிரதேசங்களினுள் செயற்பாட்டில் ஈடுபடவோ அல்லது நிறைவேற்றவோ முடியும்.

2. கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதாவது விதிகள் மூலம் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரம் அல்லது கடமை, அப்பிரதேசத்தின் ஆணையாளருடைய பொதுவான அல்லது விசேட கட்டளைப் பிரகாரம், தான் நியமனம் பெற்றுள்ள பிரதேச எல்லைக்குள் செயற்பாடுகளில் ஈடுபடவோ அல்லது நிறைவேற்றவோ பிரதி/உதவித் தொகைமதிப்பு ஆணையாளரினால் முடியும்.

3. சகல தொகைமதிப்பு உத்தியோகத்தர்களும் தொகைமதிப்பு அத்தியட்சகர் அல்லது ஆணையாளர் அல்லது தான் தொகைமதிப்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள பிரிவுக்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளரினால் குறித்த தினங்களில் குறிப்பிட்ட இடத்திற்கு மற்றும் அறிவுறுத்தல் வகுப்புக்களுக்கும், பரீட்சிப்புகளை மேற்கொள்வதற்கு நேரத்திற்கு வருவது அவசியமாகும்.

4. குறித்த கணக்கெடுப்பு கடமைகள் நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட ஒரு தொகைமதிப்பு உத்தியோகத்தர், வழமையான அந்தச் சேவையுடன் தொடர்பானதைத் தவிர, அட்டவணையொன்றைப் பூரணப்படுத்தும் நோக்கத்திற்காக பெறப்பட்ட எந்தவொரு தகவலையும் சட்டப்படியான அதிகாரமில்லாமல் வெளிப்படுத்தவோ அல்லது ஏனையோருக்கு தெரியப்படுத்துதவோ கூடாது.

5. கணக்கெடுப்பு கடமை நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட ஒரு தொகைமதிப்பு உத்தியோகத்தர், இத் தொகைமதிப்பில் கணக்கெடுக்கும் பணிகளுடன் தொடர்புடைய டெப்லட் கணினிகள், செல்லிட சாதனங்கள், படிவங்கள், ஏனைய ஆவணங்களில் உள்ள தகவல்களை தங்களது பொறுப்பில் இருக்கும் வரை சட்டப்படி அதிகாரமற்ற யாருக்காவது வெளிப்படுத்த முடியாது.

6. ஏதாவது தொகைமதிப்பு கடமையொன்றினைச் செய்யும் நோக்கத்தின் பொருட்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட சகல தொகைமதிப்பு உத்தியோகத்தர்களும், கீழக் காணப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின்கீழ் கையொப்பமிட வேண்டும்.

........................................................................................................... ஆகிய நான், விசுவாசமாகவும் உண்மையாகவும் உறுதி கூறுவது யாதெனில் தொகைமதிப்புச் சட்டத்தின் தேவைகளுக்கும் அதன் கீழ் அடங்கும் சகல விதிகளுக்கும் அமைவாக நான் .................................................................................. ஆக எனது கருமங்களை உண்மையுடனும் நேர்மையுடனும் நிறைவேற்றுவேன் என்றும், தொகைமதிப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் காலத்தில் பெற்றுக்கொள்ளப்படும் தகவல் எதையும் உரிய அதிகாரமின்றிப் பிரசுரிக்கவோ, வெளியிடவோ மாட்டேன் என்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.................................................
கையொப்பம்.

எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.
இடம்: ...................................................................
திகதி: ..................................................................

.................................................
கையொப்பமும், பதவியும்

7. மேற்பார்வை உத்தியோகத்தர் பதவிக்கு குறையாத பதவியொன்று வகிக்கின்ற சகல தொகைமதிப்பு உத்தியோகத்தர்களும் முன் கூறப்பட்ட உறுப்புரைக்கு அமைவாக சத்தியப் பிரமாணம் அல்லது அத்தாட்சியை வெளிப்படுத்தும் படிவங்களை ஏனைய தொகைமதிப்பு உத்தியோகத்தர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரிவு IV – தொகைமதிப்புத் தேவைகளுக்கான தகவல்கள்**

1. தொகைமதிப்பு நோக்கங்களுக்காக தொகைமதிப்புப் படிவங்களிலிருந்து பெறக்கூடிய தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**(அ) குடிசன, வீட்டு வசதிகள் அட்டவணை:**

**(i) நபர்கள் சம்பந்தமான கீழ் காணப்படும் தகவல்கள் :**

பெயர் : ..........................................................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................
குடித்தனத் தலைவருடனான உறவு முறை : ..................................................................
நீங்கள் ஒரு மதகுருவா : .....................................................................................
பால் நிலை : ...................................................................................................
பிறந்த வருடமும், மாதமும் : ................................................................................
விவாக நிலை : ................................................................................................
சமயம் : .........................................................................................................
இனத்தொகுதி : ................................................................................................
குடியுரிமை : ...................................................................................................
ஒருவர் பிறக்கும் போது அவரது தாயின் வழமையான வதிவிட மாவட்டம்/நாடு : ..................................
வழமையாக வசிக்கும் மாவட்டம் அல்லது வதிவிடத்தில் தற்போது வசிக்கும் காலம் (வருடங்களில்) : ...........................
இதற்கு முன் (இறுதியாக) வசித்த மாவட்டம் : ..........................................................
தற்போது வசிக்கும் மாவட்டத்திற்கு வசிக்க வந்தமைக்கான காரணம் : ...........................................
நிரந்தர வதிவிட மாவட்டம் : ..................................................................................
நிந்தர வதிவிட பிரதேச செயலகம் : ............................................................................
தொற்றா நோய் நிலைமைகள் : .................................................................................
கடந்த 30 நாட்களுக்குள் ஈடுபட்ட கல்வி நடவடிக்கை : ........................................................
அதியுயர் கல்வித் தகைமை : ..................................................................................
'ஸ்மார்ட்' கையடக்கத் தொலைபேசி/ டெப்லட் கணினியைப் பயன்படுத்தி ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்ள முடிதல் ? : ..........................................................................................
கணினியைப் பயன்படுத்தி ஏதேனும் நடவடிக்கையை தனியாக மேற்கொள்ள முடிதல் ? : ....................................
உடல் மற்றும் உளரீதியான குறைபாடுகள் : ....................................................................
மொழிகளைப் பேசும் திறன் : ...................................................................................
மொழிகளை வாசிக்கும் மற்றும் எழுதும் திறன் : ..............................................................
ஏதேனும் தொழிற்பயிற்சியொன்றை அல்லது தகைமை ஒன்றைப் பெற்றுள்ளமை? (அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுடன்) : ..........................................................................................
கடந்த வாரத்தில் குறைந்தது ஒரு மணித்தியாலத்திற்காவது ஏதேனும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை? : ..........................................................................................
கடந்த வாரத்தில் ஈடுபட்ட பிரதான தொழில் (ஈடுபட்ட பொருளாதார நடவடிக்கை) : ...................................
தொழிலின் வகை : ..............................................................................................
நிறுவனத்தின் பெயர் : .........................................................................................
நீங்கள் சேவை புரியும் நிறுவனத்தில் அல்லது உங்களது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் பிரதான பொருளாதார நடவடிக்கை : ..........................................................................................
நீங்கள் சேவை புரியும் நிறுவனத்தில் அல்லது உங்களது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கையின் தன்மை : ..........................................................................................

நீங்கள் வேலை செய்யும் அல்லது பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் மாவட்டம் : ......................................
நீங்கள் கடந்த வாரத்தில் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடாது, ஆனால் சம்பளம் பெறும் வேலையொன்றைச் செய்வதற்கு அல்லது சுயதொழிலொன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்தீர்களா : ...........................................................
நீங்கள் கடந்த 4 வாரங்களில் நீங்கள் சம்பளம் பெறும் தொழிலில் ஈடுபடுவதற்கோ அல்லது சுயதொழில் செய்வதற்கோ ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா : ........................................................................................
எதிர்வரும் இரண்டு வாரங்களுள் தொழில் கிடைத்தால் அதனை ஏற்கத் தயாரா/சுயதொழில் தொடங்குவதற்கு தயாராக உள்ளீர்களா : ........................................................................................................
நீங்கள் தொழில் ஒன்றை ஏற்காமைக்கான/சுயதொழிலை ஆரம்பிக்காமைக்கான பிரதான காரணம் : ........................
எப்போதாவது உயிர்ப்பிறப்பொன்று நிகழ்ந்ததா : ..........................................................................
உயிர்ப்பிறப்புகளின் மொத்த எண்ணிக்கை : ..........................................................................
தற்போது உயிருடன் இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை : ..........................................................
கடைசியாக உயிர்ப் பிறப்பு இடம்பெற்ற ஆண்டு மற்றும் மாதம் : ..................................................

(ii) **குடித்தனத்தைச் சேர்ந்தவர்கள் ஆனால் நாட்டில் வேறு எங்காவது வழமையாக வசிப்பவர்கள் (நிரந்தரமாக வசிப்போர் தவிர) :**

பெயர் : ..........................................................................................................
குடித்தனத் தலைவருடனான உறவுமுறை : ..........................................................................
பால் நிலை : ......................................................................................................
கடைசிப் பிறந்த தினத்தன்று உள்ளவாறு வயது வருடங்களில் : ..................................................
தற்போது வசிக்கும் மாவட்டத்தின் பெயரும் குறியீடும் : ..........................................................
வேறு இடத்திற்கு சென்ற காரணம் : ..........................................................................

(iii) **குடித்தனத்தைச் சேர்ந்தவர்கள் ஆனால் 6 மாதங்களுக்கும் மேலாக வெளிநாடு சென்றவர்கள் அல்லது 6 மாதங்களுக்கும் மேலாக வெளிநாட்டில் வசிக்கும் எண்ணத்துடன் வெளிநாடு சென்றவர்கள். (நிரந்தரமாக வசிப்பவர்கள் தவிர)**

பெயர் : ..........................................................................................................
குடித்தனத் தலைவருடனான உறவுமுறை : ..........................................................................
பால் நிலை : ......................................................................................................
கடைசிப் பிறந்த தினத்தன்று உள்ளவாறு வயது வருடங்களில் : ..................................................
தற்போது வசிக்கும் நாட்டின் பெயரும் குறியீடும் : ..........................................................
வெளிநாடு சென்ற காரணம் : ..........................................................................
வெளிநாட்டில் வசிக்கும் காலம் : ..........................................................................

(iv) **குடித்தனத் தகவல்கள் :**

குடித்தனத்தில் வழமையாக வசிக்கும் நபர்களின் எண்ணிக்கை : ..................................................
குடிப்பதற்கு தண்ணீர் பெறும் பிரதான முறை : ..........................................................
உங்கள் வீட்டுக்கூறுக்குள் உங்கள் குடித்தனத்துக்கான குடிநீர் கிடைக்குமா : ..........................................
பிரதான குடிநீர் மூலத்தின் ஊடாக ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கக் கூடியதாக உள்ளதா : ................................
கடந்த ஆண்டு (2023) குடிநீர் கிடைக்காத மாதங்கள் : ..........................................................
உணவு சமைக்கப் பாவிக்கும் பிரதான எரிபொருள் வகை : ..........................................................
சமையலுக்குப் பயன்படுத்தப்படும் இரண்டாம் நிலை எரிபொருள் வகை : ..........................................
வெளிச்சம் பெறும் பிரதான மார்க்கம் : ..........................................................................
வெளிச்சம் பெறும் துணை நிலை மார்க்கம் : ..........................................................................

மலசலகூட (கழிவறை) வசதி : ..................................................................................................
மலசலகூடத்தின் வகை : .........................................................................................................
திண்மக் கழிவுகள் அகற்றும் பிரதான மார்க்கம் : ..............................................................................
திரவக் கழிவுகள் அகற்றுதல் : ...................................................................................................
வீட்டின் உரிமை : ....................................................................................................................
குடித்தனப் பயன்பாட்டுக்காக காணப்படும் தொடர்பாடல் தொழிநுட்ப சாதனங்கள், வசதிகள் மற்றும் வாகனங்கள் : ......
வீட்டிலிருந்து இணையத் தளத்தைப் பயன்படுத்த முடியுமா? : ..............................................................
2023 இல் இக் குடித்தனத்தின் எவரும் இறந்தார்களா? : ........................................................................
இறந்தவர்களின் எண்ணிக்கை : ..................................................................................................
பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை : ............................................................................

(V) **வீட்டுக்கூறு பற்றிய தகவல்கள்**

இந்த வீட்டுக்கூறு அலகு ஒரு வழமையான வீட்டுக்கூறா அல்லது அது சாமறி வீடா (இணை-வீடு)/ அதில் குடியிருப்பவர்கள் உறவினர்கள் அல்லாத தங்கும் இல்லமா? : ..................................................................................
வீட்டுக்கூறின் கட்டமைப்பு : ......................................................................................................
நிர்மாணிக்கப்பட்ட வருடம் : .......................................................................................................
கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய பொருட்கள் : ................................................................
இந்த வீட்டுக்கூறு ஒற்றை ஒரு அறைதான் அறை வீட்டுக்கூறாக இருந்தாலும், கூறில் உள்ள அறைகளின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டதாக இருந்தாலும் : ....................................................................................
படுக்கையறைகளின் எண்ணிக்கை : .............................................................................................
வீட்டுக்கூறில் உள்ள அறைகளின் மொத்த எண்ணிக்கை : .....................................................................

**(ஆ) வினாக்கொத்து பூரணப்படுத்தப்பட்டதா அல்லது ஒரு பகுதி முடிக்கப்பட்டதா** : ..................

2. தொகைமதிப்பு உத்தியோகத்தர் தன்னுடைய பிரதேசத்தினுள் அல்லது வழங்கப்பட்ட கூறுகளிலிருக்கின்ற சகல நபர்கள் பற்றிய அல்லது அவர்களது வீடுகளில் வசிக்கின்றவர்கள் பற்றி I ஆம் பிரிவின் விதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள காரணங்களை வினவி அல்லது அப்படியான நபர்கள் குறிக்கப்பட்ட படிவங்களில் தேவையான விடயங்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து, தொகைமதிப்புக்குத் தேவையான தகவல்கள் பெறமுடியும்.

3. சனத்தொகை மற்றும் வீட்டுவசதிக்கான அட்டவணை, விசேட நிறுவனங்களுக்கான அட்டவணை மற்றும் தங்குமிடம் இல்லாத நபர்களின் அட்டவணை ஆகியவை சரியாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த, எந்தவொரு நபரிடமும் தொகைமதிப்பு உத்தியோகத்தருக்கு தேவையான கேள்விகளைக் கேட்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

4. வழமையான வதிவிடத்திற்கு அமைவாக நபர்கள் மற்றும் வீடுகள் பற்றி எடுக்கப்படும் தகவல்களை அத்தியட்சகரினால் மீண்டும் தீர்மானிக்கப்பட்ட பொருத்தமான நேரத்தில் எந்தவொரு நபர்களிடமிருந்தும் விசாரித்து அறிந்து கொள்வதற்குத் தொகைமதிப்பு உத்தியோகத்தரால் முடியும்.

5. ஒரு தொகைமதிப்பு உத்தியோகத்தர், எந்தவொரு நபரைப் பற்றியும் இந்தப் பிரிவில் விதி I இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர் வழக்கமாக வசிக்கும் இடம் தொடர்பான தனிப்பட்ட கேள்விகள் அல்லது இந்த பிரிவில் விதி I இல் குறிப்பிடப்பட்டுள்ள சில விவரங்கள் குறித்து கேட்கலாம். மேலும் இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியது அந்த நபரின் கடமையாகும்.

6. கட்டளைச் சட்டத்திலோ அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்ட விதிகளின் கீழோ அட்டவணையொன்றைப் பூரணப்படுத்த வேண்டிய நபரொருவரினால் அப்படிவத்தில் அல்லது வேறு படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட ஏதாவது நபருக்காக அவரினால் பதியப்பட்ட விடயங்கள் தேவையேற்படின் திருத்தும் சுற்றில் திருத்தம் செய்து இதன் பிரிவு I விதிகளின் கீழ் காணப்படும் தற்போது பதியப்பட்டிருக்காத சில விடயங்கள் உள்ளடக்கப்பட முடியும்.

EOG 10 - 0240/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.